# தூத்துக்குடி மாநகராட்சி
## கூட்டப்பொருள்

2020ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 06 ம் நாள் காலை 11.00 மணியளவில் ஆணையர் மற்றும் தனி அலுவலர் அறையில் வைத்து நடைபெற்ற மாமன்ற கூட்ட நடவடிக்கைகள்.

## பொருள்

| | | |
|---|---|---|
| 06.01.2020 | 1)தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரம் பிரிவின் கீழ் மாநகராட்சி பகுதிகளின் 60 வார்டுகளில் உள்ள கல்வி நிலையங்கள் மருத்துவமனைகள் திருமண மண்டபங்கள், தொழிற்சாலைகள் மற்றும் பொது மக்கள் அதிக அளவு பயன்படுத்தும் இடங்களுக்கு சுகாதார சான்றிதழ் நலச்சான்றிதழ் மற்றும் பதிவு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி சான்றிதழ் பெறுவதற்கு மாநகராட்சியால் ரூபாய் 26/– மட்டுமே கட்டணமாக வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சான்றிதழ் வழங்க மாநகர் நல அலுவலர் சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார ஆய்வாளர் நேரில் ஆய்வு செய்து சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி தொகை நிர்ணயிக்கப்பட்டு சுமார் 20 ஆண்டுகள் கடந்துவிட்டது தற்பொழுது மேற்படி தொகை மிகவும் குறைவாக உள்ளது என தெரிவித்து மேற்படி கட்டணத்தை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யுமாறு சுகாதார அலுவலர் மாநகர் நல அலுவலர் வாயிலாக அறிக்கை செய்துள்ளனர்.<br>1) மழலைப் பள்ளி, ஆரம்பப் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி – ரூ. 500/–<br>2) உயர்நிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி ரூ.1000/–<br>3) மருத்துவமனை திருமண மண்டபம் மற்றும் இதர நிறுவனங்கள் ரூ.1000/–<br>4) நலச்சான்றிதழ் மற்றும் பதிவுச் சான்றிதழ் ரூ. 1000/–<br><br>மேற்படி அறிக்கையின் அடிப்படையில் தற்போதைய நிர்வாக செலவினங்களை வழிகாட்டும் வகையில் மேற்படி கட்டணங்களை நிர்ணயம் செய்திட அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம்<br>எச்4/3836/19 | 1)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2)தூத்துக்குடி மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவின் மூலம் பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன. மேற்படி பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் திருத்தங்கள் மேற்கொள்ள ரூபாய் 20/– மட்டும் திருத்துதல் கட்டணமாக நிர்ணயம் செய்யப்பட்டு பொது மக்களால் மாநகராட்சியில் செலுத்தப்பட்டு வருகிறது. மேற்படி கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு சுமார் 15 ஆண்டுகள் கடந்து விட்டது. தற்போது பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் பெறுவதற்கே தமிழக அரசால் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல் நெறிமுறைப்படி சான்றிதழ் ஒன்றுக்கு ரூபாய் 200/– நிர்ணயம் செய்யப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. | 2) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | இந்நிலையில் திருத்துதல் கட்டணம் ரூபாய் 20/– என்பது நிர்வாக செலவினங்களை கணக்கிடும் போது மிகக் குறைவானதாகும். எனவே பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ்களில் திருத்துதல் கட்டணம் ரூபாய் 250/– (இருநூற்று ஐம்பது) என நிர்ணயம் செய்து வசூலிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு**<br>மாமன்றம் அனுமதிக்கலாம். எச்4/3598/19 | |
| | **3)**தூத்துக்குடி வட்டாட்சியர் அவர்களின் ந.க.அ1/11439/05 நாள் 13.11.2019 கடிதத்தில் தூத்துக்குடி வட்டம் மீளவிட்டான் பகுதி–2 கிராமம் . வார்டு எண். 2 பிளாக் 3 நகரளவை எண். 50/152– ல் 4757 சதுர அடி நிலம் பாத்திமா துவக்கப் பள்ளிக்கு 21.03.2008 முதல் 20.03.2011 வரையிலான காலங்களுக்கு குத்தகை நீட்டிப்பு பிரேரணையினை மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) அவர்களுக்கு அனுப்பப்பட்டதில் தூத்துக்குடி மாநகராட்சியின் தீர்மான நகலினை இணைத்து அனுப்ப தெரிவிக்கப்பட்டதற்கிணங்க மேற்படி இடத்தை 21.03.2008 முதல் 20.03.2011 வரையிலான காலங்களுக்கு குத்தகை நீட்டிப்புக்கு தூத்துக்குடி மாநகராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி நகல் வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.<br>அதன்பேரில் நேராய்வு செய்யப்பட்டதில் மேற்படி இடம் நகரளவை பதிவேட்டில் அரசு புறம்போக்கு ஜிஆர். நத்தம் என்று உள்ளதால் மாநகராட்சிக்கு சொந்தமானது அல்ல எனவே மேற்படி இடம் குத்தகை நீடிப்புக்கு மாநகராட்சி தரப்பில் ஆட்சேபனை ஏதும் இல்லை என இளநிலை பொறியாளர் மற்றும் நகர சார் ஆய்வாளர் ஆகியோரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் மேற்படி இடத்திற்கு குத்தகை நீட்டிப்பு வழங்க ஆட்சேபனையில்லை என சம்பந்தப்பட்ட துறையினருக்கு தெரிவிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 1468/கிம/எப்1 | 3) அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |
| | **4)**இம்மாநகராட்சி மேற்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள டூவிபுரம் மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் திருமதி. ச. சரண்யா என்பவர் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து வருகிறார். அன்னார் ஒரு மாற்றுத்திறன் உடையவர் என்பதால் மாநகராட்சிக்குச் செலுத்த வேண்டிய தொழில் வரியிலிருந்து விலக்கு அளிக்க கோரி உரிய சான்றிதழ்களுடன் விண்ணப்பித்துள்ளனர்.<br>தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டம் 169 (H)(C) ன் படியும் அரசு ஆணை TAMIL NADU GOVERNMENT GAZETT ன் படியும் திருமதி.ச. சரண்யா என்பவருக்கு 2019–2020 முதல் அரையாண்டு தொழில் வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>அ2/1489/2019/மே.ம. | 4)அலுவலகக் குறிப்பு அனுமடதிக்கப்ட்ள |

| | | |
|---|---|---|
| | 5)தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதியில் கடந்த வடகிழக்குப் பருவமழையின் போது மாநகராட்சிப் பகுதியில் உள்ள சாலைகள் மிகுந்த சேதமடைந்து போக்குவரத்துக்கும் பொது மக்கள் மற்றும் பள்ளி கல்லூரி மாணவ மாணவிகள் இரு சக்கர வாகனத்தில் செல்வதற்கும் சிரமத்திற்குள்ளான நிலையில் உள்ளது. இந்த சாலைகளை சீரமைக்க கீழ்க்கண்டுள்ளவாறு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது. | 5)அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது. |

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | வார்டு எண். 15. 2ஆம் கேட் முதல் 1வது கேட் வரை உள்ள பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 39.50 |
| 2 | வார்டு எண். 19 வெற்றிவேல்புரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 16.90 |
| 3 | வார்டு எண. 16 1 ஆம் கேட் முதல் காளியப்பன் தெரு வரை உள்ள பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 35.80 |
| 4 | வார்டு எண். 21 காளியப்பர் தெரு முதல் கால்டுவெல் பள்ளி வரை உள்ள பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 22.50 |
| 5 | வார்டு எண். 31 பிவிஆர் புரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி (ஜார்ஜ் ரோடு வார்டு எண். 33) | 15.90 |
| 6 | வார்டு எண். 26 டிஆர் பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 18.70 |
| 7 | வார்டு எண்.26 தெப்பக்குளம் தெரு பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 7.65 |
| 8 | வார்டு எண்.33 தாமஸ்நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 33.45 |
| 9 | வார்டு எண். 19 சாமுவேல்புரம் (மாநகராட்சி பள்ளி சாலை) பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 10.60 |
| 10 | வார்டு எண். 38 டூவிபுரம் 2வது தெரு பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 49.85 |
| 11 | வார்டு எண்.40 மீனாட்சிபுரம் மெயின் ரோடு பகுதியில் தார் சாலை மேம்படுத்தும் பணி | 49.95 |
| 12 | வார்டு எண்.43 பிரையண்ட் நகர் 8வது மற்றும் 9வது தெரு கிழக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 34.40 |
| 13 | வார்டு எண். 43 பாளை மெயின் ரோடு முதல் பிரையண்ட் நகர் 5வது தெரு மேற்கு பகுதி வரை தார்சாலை அமைக்கும் பணி | 45.40 |
| 14 | வார்டு எண். 41 பிரையண்ட் நகர் 5வது தெரு மேற்கு சந்திப்பு முதல் பிரையண்ட் நகர் 12வது தெரு மேற்கு சந்திப்பு வரை உள்ள பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 45.40 |
| 15 | வார்டு எண்.1 பண்டாரம்பட்டி முதல் மீளவிட்டான் இணைப்புச்சாலை தெற்கு ரோடு வரை உள்ள பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 45.00 |
| 16 | வார்டு எண். 1 பண்டாரம்பட்டி முதல் மீளவிட்டான் இணைப்புச் சாலை வடக்கு ரோடு வரை உள்ள பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 32.50 |
| 17 | வார்டு எண்.2 நேதாஜிநகர் 7வது 8வது தெரு மற்றும் குறுக்குத் தெரு தார்சாலை அமைக்கும் பணி | 34.00 |
| 18 | வார்டு எண். 3 மகிழ்ச்சிபுரம் (இரயில்வே கேட் அருகில்) தார்சாலை அமைக்கும் பணி | 26.30 |

| | | |
|---|---|---|
| 19 | வார்டு எண். 3 நிகிழேஸ்நகர் பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 26.30 |
| 20 | வார்டு எண். 3 பாரதிநகர் மற்றும் சின்னக்கண்ணுபுரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 49.00 |
| 21 | வார்டு எண். 3 ராஜகோபால்நகர் தெரு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 42.00 |
| 22 | வார்டு எண்.3 பாரதிநகர் (நீச்சல்குளம் ரோடு) பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 21.60 |
| 23 | வார்டு எண்.4 வடக்கு மண்டலம் அலுவலக ரோடு பகுதியில் தார்சாலை மேம்படுத்தும் பணி | 9.10 |
| 24 | வார்டு எண்.6 சக்திவிநாயகபுரம் 3வது தெரு பகுதியில் தார்சாலை அமைத்தல் மற்றும் மழைநீர் வடிகால் கட்டும் பணி | 24.70 |
| 25 | வார்டு எண். 18 லூர்தம்மாள்புரம் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 15.00 |
| 26 | வார்டு எண். 48 திரு.வி.க.நகர் மெயின் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 12.00 |
| 27 | வார்டு எண். 48 திரு.வி.க.நகர் 2வது தெரு முதல் 5வது தெரு வரை உள்ள பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 49.63 |
| 28 | வார்டு எண். 48. கிருபை நகர் வடக்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 47.50 |
| 29 | வார்டு எண். 49 சால்ட் காலனி மெயின் ரோடு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 17.94 |
| 30 | வார்டு எண். 49 கால்டுவெல் காலனி 2வது தெரு மேற்கு பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 11.55 |
| 31 | வார்டு எண். 51 காதர்மீரான் நகர் பகுதியில் தார்சாலை அமைக்கும் பணி | 47.30 |
| 32 | வார்டு எண். 53 தெற்கு தெரு பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணி | 17.10 |
| 33 | வார்டு எண். 53 பெரியார் நகர் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணி | 11.80 |
| 34 | வார்டு எண். 54 தங்கம்மாள்புரம் பகுதியில் தார் சாலை அமைக்கும் பணி | 27.00 |
| | மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள சாலை பணிகளை 14வது மத்திய நிதிக்குழு மாமன்ற நிதி 2019-20 (14th CFC) இன் கீழ் மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம் இ1/3766/2019 | |
| | 5)மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள "சீர்மிகு நகரம்" (Smart City) தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்ட 12 நகரங்களும் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி திட்டம் தயாரித்து மேற்கண்ட "சீர்மிகு நகரம்" (Smart City) திட்டத்தினை தூத்துக்குடி மாநகராட்சி பகுதியில் செயல்படுத்த நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மாந2) அரசாணை எண். (Ms.) எண்.109 நாள் 24.10.2017ல் கண்டுள்ள அரசாணையில் உத்தரவிட்டுள்ளது.<br><br>அதன்பேரில் தலைவர் தூத்துக்குடி ஸ்மார் சிட்டி லிமிட்டெட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிர்வாக குழு கூட்டம் நடவடிக்கை எண். 05.07 நாள் 12.07.2019இல் கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள பணிக்கு ரூ.16,97,84,940/–க்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. | |

| | | |
|---|---|---|
| | மேற்படி பணியினை அண்ணாபல்கலை கழகம் (CES) அறிவுரைப்படி மறு அளவீடு செய்தததில் கீழ்க்கண்டுள்ளவாறு மதிப்பீடு தொகை கணக்கிடப்பட்டுள்ளது. | |
| வ.எண் | பணிகளின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை (ரூ. லட்சத்தில்) |
| 1 | தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் சேகரமாகும் திடக்கழிவுகளை உயிர் சுரங்க செயல்முறை மூலம் மரவு கழிவுகளை அகற்றுதல் பணிக்கு (Removal of the Legacy Waste Through Bio Mining process to reclaim the existing dump yard located at Tharuvaikulam) | 14.50 |
| | **மொத்தம்** | **14.50** |

எனவே தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான தருவைக்குளம் உரக்கிடங்கு பகுதியில் சேகரமாகும்.திடக்கழிவுகளை உயிர் சுரங்க செயல்முறை மூலம் மரவு கழிவுகளை அகற்றுதல் பணிக்கு ((Removal of the Legacy Waste Through Bio Mining process to reclaim the existing dump yard located at Tharuvaikulam) பணியினை ரூ. 14.80 கோடி மதிப்பீட்டில் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவுசம், மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – மாமன்றம் அனுமதிக்கலாம் இ1/3209/2015 (BioMin)

தூத்துக்குடி மாநகராட்சி
நாள்.06.01.2020

ஆணையர் (ம) தனி அலுவலர்
தூத்துக்குடி மாநகராட்சி